# அமுக்கக் குழுக்கள்

# Pressure Groups



© www.e-thaksalawa.moe.gov.lk

தேர்ச்சி 2.0: அரசறிவியல் பாடத்துறையில் உள்ளடங்கும் கருப்பொருட்களை அறிந்து கொள்வார்.

தேர்ச்சி மட்டம் 2.4.3: சமூகத்தில் அரசியல் வாழ்வின் அமுக்கக் குழுக்கள் பற்றி விமர்சிப்பார்.

## அமுக்கக் குழுக்கள் (Pressure Groups)

- அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதையும் பிரயோகிப்பதையும் நோக்கமாகக் கொள்ளாது ஆனால் அரசாங்கத்தின் மீது பல்வேறு விதங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதன் மூலம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் செயற்படும் மனிதக் குழுக்களும் ஒழுங்கமைப்புக்களுமே **அமுக்கக்குழுக்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

- ஐரோப்பிய, அமெரிக்க அரசறிவியலில் அதிகம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அரசியல் சமுதாயக் குழுக்களே அமுக்கக்குழுக்களாகும்.
- பிரித்தானியாவில் **அமுக்கக்குழுக்கள்** (Pressure Group) என்ற பெயராலும், அமெரிக்காவில் **நலன் பேண் குழுக்கள்** (Interest Groups), மற்றும் **ஆதரவு திரட்டும் குழுக்கள்** (Lobbying Groups) என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

### அமுக்கக் குழுக்கள் (Pressure Group)

ஒரு குழுவாக ஒழுங்கமைந்து அரசாங்கத்தின் சட்டங்கள், கொள்கைகள் தீர்மானங்கள் என்பவற்றின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தும் ஒழுங்கமைந்த மக்கள் குழுக்களாகும்.

### நலன்பேண் குழுக்கள் / ஆசைக்குழுக்கள்

குறிப்பிட்ட ஒரு நலனையே, நோக்கத்தையே, பெறுபேற்றையோ அடிப்படையாகக் கொண்டு தமது உறுப்பினர்களின் தேவைகளையும், நலன்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக செயற்படும் ஒழுங்கமைந்த மக்கள் குழுவாகும்.

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஆதரவுதிரட்டும் குழுக்கள் / நியாயப் பிரச்சாரக் குழுக்கள்



சட்டங்கள், கொள்கைகள், தீர்மானங்களில் அழுத்தம் கொடுப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளையும், அரசியல் வாதிகளையும், அரசாங்க உத்தியோகத்தைர்களையும் சந்தித்து, தமக்குத் தேவையான அழுத்தங்களை செலுத்தும் அல்லது பிறிதொரு சமூகக் குழுவின் அல்லது அரசாங்கத்தின் சார்பாக பணத்துக்காக காரியத்தை செய்யும் ஒழுங்கமைந்த குழுவாகும்.

நவீன அரசியல் முறைமைகளில் செயற்படும் அமுக்கக்குழுக்கள் இருவகைப்படும்

01 தேசிய ரீதியான அமுக்கக்குழுக்கள்

02 சர்வதேச ரீதியான அமுக்கக்குழுக்கள்

### தேசியரீதியான அமுக்கக்குழுக்கள்



தேசியரீதியான அமுக்கக்குழுக்களாக தொழிற்சங்கங்கள், தொழில் வழங்குனர் அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், சமய அமைப்புக்கள், ஊடக அமைப்புக்கள், நுகர்வோர் அமைப்புக்கள் போன்றவற்றை இனங்காணலாம்.

### சர்வதேச ரீதியான அமுக்கக்குழுக்கள்



சர்வதேசரீதியான அமுக்கக்குழுக்களாக சர்வதேச மட்டத்தில் மனித உரிமை அமைப்புக்கள், சமாதானம் தொடர்பான அமைப்புக்கள், ஊடக உரிமை தொடர்பான அமைப்புக்கள், போர் ரீதியான சில அமைப்புக்கள், பல்தேக் கம்பனிகள் போன்றவற்றை இனங்காணலாம்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இலங்கையில் காணப்படும் அமுக்கக் குழுக்கள்.

- சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர் சங்கம்
- இலங்கை வர்த்தக சபை
- தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கம்
- அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்
- அகில இலங்கை பௌத்த மஹா சம்மேளனம்



## அமுக்கக் குழுக்களின் பண்புகள்.

- அதிகாரத்தில் பங்கேற்காமை.
- சகலவிதமான நலன்களையும் அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைந்திருத்தல்.
- தமக்கேயுரிய அரசியல் நலன்களைக் கொண்டிருப்பினும் அவற்றை பகிரங்கமாக வெளியிடாமை.
- அரசியல் ரீதியாக பக்கச்சார்பற்ற வகையில் செயற்படுதல்.
- சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, பணிக்குழு போன்ற ஊடகங்களின் மூலம் செயற்படுதல்.

## ஜனநாயக அரசியல் முறைமைகளின் இருப்புக்கு அமுக்கக் குழுக்கள் ஆற்றும் பணிகள்.

- தனிப்பட்ட நலன்களைப் பேணிப் பாதுகாத்தல்.
- ஜனநாயக ஆட்சியைப் பலப்படுத்தல்.
- அரசாங்கச் செயற்பாட்டிற்கு ஆதரவளிப்பதும், எதிர்ப்பதும்.
- நல்லாட்சியை கொண்டு நடத்துவதற்கு உதவுகின்றது.
- அரசாங்கத்திற்குத் தகவல் வழங்கும் பிரதான மூலாதாரமாக இருத்தல்.
- அரசாங்கக் கொள்கைகளை வகுப்பதில் பிரதான இடத்தினை வகிக்கின்றது.
- சமகால அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகளைப் பற்றி மக்களுக்கு அறிவூட்டல்.

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசியல் கட்சிக்கும் அமுக்கக் குழுக்களுக்குமுள்ள வேறுபாடுகள்.

| அரசியல் கட்சி | அமுக்கக் குழுக்கள் |
| --- | --- |
| நேரடியாக அதிகாரத்தைக் கைப்பற்றி அரசாங்கத்துக்குள் நுழைந்து ஆதிக்கம் செலுத்தும். | அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கமின்றி அரசாங்க சட்டம், கொள்கைகள், தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். |
| தமது கொள்கைகளுக்கு நிகரான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும். | பொறுப்பை நேரடியாக ஏற்றுக் கொள்ளாது நலன்களை அடையவே முயலும். |
| ஆயிரக்கணக்கான அல்லது இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். | நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். |
| நேரடியாக செயற்படும் அமைப்புக்கள். | பெரும்பாலும் அரசியல் கட்சிகளினூடாகவே செயற்படும். |
| பல்வேறு கொள்கைகளையும், கருப்பொருட்களையும் கொண்டு செயற்படும். | ஜனநாயகம், மனித உரிமைகள், சிவில் உரிமைகள் போன்ற பரந்த கருப்பொருட்களைக் கொண்டு செயற்படும். |



தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.நமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அழுக்கக் குழுக்களுக்கு ஆதரவானதும் எதிரானதுமான கருத்துக்கள்.

| ஆதரவான கருத்துக்கள் | எதிரான கருத்துக்கள் |
| --- | --- |
| மக்கள் குழுவின் மனக்குறைகள், கோரிக்கைகள், நலன்கள், தேவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரல். | அழுக்கக் குழுவில் இணைவோர் செல்வந்தர், சலுகை பெற்ற பகுதியினர் இதனால் உயர் குழாம் வகுப்பினர் பயனடைவர். |
| மக்களின் குறைநிரப்பியாக செயற்பட்டு மக்களின் அரசியல் பங்கேற்பினை விரிவுபடுத்தல் | அழுக்கக்குழுக்கள் தமது நலன்களுக்காக மட்டும் சுயநலத்துடன் செயற்படுகின்றன. |
| தமது கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பாக அரசாங்கம் காட்டும் தன்னிச்சையான துலங்கல்களுக்கு எதிரான தடையாக செயற்பட்டு சமூகத்தின் ஜனநாயக இருப்பை பலப்படுத்தல். | ஜனநாயக செயன்முறையில் வெளிப்படையானதாயினும் அழுக்கக்குழுக்கள் அரசாங்கத்தின் கொள்கைகளையும், தீர்மானங்களையும் மூடப்பட்டவையாக மாற்றுகின்றன. |

## மதிப்பீட்டு வினாக்கள்



**வினா - 01**

அமெரிக்காவில் அழுக்கக் குழுக்கள் அழைக்கப்படும் பெயர்கள் இரண்டு தருக.

.................................................................................................................................
.................................................................................................................................
....................................................................



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வினா - 02**

சர்வதேச ரீதியிலான அமுக்கக் குழுக்கள் இரண்டு தருக.

....................................................................................................................................................
....................................................................................................................................................
..............................................................

**வினா - 03**

அமுக்கக் குழுக்களின் பணிகள் இரண்டு தருக.

....................................................................................................................................................
....................................................................................................................................................
....................................................................................................................................................

**வினா - 04**

அமுக்கக் குழுக்களின் பண்புகள் இரண்டு தருக.

....................................................................................................................................................
....................................................................................................................................................
..............................................................

**வினா - 05**

சமூகத்தில் அரசியல் வாழ்வின் அமுக்கக் குழுவின் வகிபங்கு.

....................................................................................................................................................
....................................................................................................................................................
....................................................................................................................................................
....................................................................................................................................................

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk